பதிவாளர் : ஆறு.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (08.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 132

# வவுனியாவில் பயணிகள் பஸ் மீது கிளைமோர் தாக்குதல்; 7 பேர் பலி!

## இராணுவப் புலனாய்வுப் பிரிவே நடத்தியதாகப் புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா,ஏப்ரல்8

**மன்னார் - வவுனியா வீதியில், குருக்கஊர் என்ற இடத்தில் வைத்து பொதுமக்கள் பயணம் செய்த பஸ் மீது நேற்றுக்காலை கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.**

**அத்தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஆறுபேர் பொதுமக்கள் ஒருவர் சிவில் உடையில் பணயம் செய்த இராணுவச் சிப்பாய்.**

மன்னாரில் இருந்து வவுனியாவை நோக்கி வந்துகொண்ட இ.போ.ச பஸ், நேற்றுக்காலை 7.45 மணியளவில், வவுனியாவிலிருந்து 25 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள - பிரமணாளங்குளத்துக்கும் புதுக்குளத்துக்கும் இடையில் உள்ள - குருக்கஊரில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

கிளைமோர் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 25 பேர் காயமுற்றனர்.

தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் பயணம் செய்த பஸ் மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே கிளைமோர் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார்.

இக்கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டோரில் 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு-

பொன்னம்பலம் கிருபாகரன்(பஸ் சாரதி), சின்னத்தம்பி நிர்மலா(வயது44), சசிதரன்(வயது 14), சகாயநாதன் சூசை, முடியப்பு யேசுநாயகம்(வயது25), சிவலிங்கம் முருங்கன் மற்றும் பொதுமக்கள் உடையில் மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இராணுவத்தைச் சேர்ந்தவரும் அடையாளம் காணப்பட்டனர்.

பஸ் நடத்துநர் பஷீர் மொகைதீன் காயமுற்றார்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து மன்னார் பணிமனையிலிருந்து சேவையில் ஈடுபடும் சகல பஸ்களும் ரத்துச்செய்யப்பட்டன.

இதில் படுகாயமடைந்த சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் பணியாளர்கள் இருவர் வவுனியா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். (அ)

## பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டு நிதி

கொழும்பு,ஏப்.8

வவுனியா - மன்னார் வீதியில் பயணிகள் பஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு பத்தாயிரம் ரூபாவும் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் றிசாட் பதியுதீன் காயமடைந்தவர்களை வவுனியா வைத்தியசாலையில் நேரில் சென்று பார்வையிட்டார். அங்கே வைத்து சிலருக்கு நேரடியாக இழப்பீட்டு நிதி வழங்கப்பட்டது. (அ-4)

## திருமலையில் வர்த்தகர் சுட்டுக்கொலை!

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வர்த்தகர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுப் பி.ப. 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பரமகுரு ரமேஸ்பாபு (வயது 35) என்பவரே சுடப்பட்டார் என்று அடையாளம் காணப்பட்டது. (அ-4)

## மட்டக்களப்பு அகதி முகாமில் 31 பேர் பொலீஸாரால் கைது

### அவர்களில் ஒன்பது பேர் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, ஏப்.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த இரு பெண்கள் உட்பட ஒன்பதுபேர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுவன்கேணியிலுள்ள அகதி முகாம்களில் நேற்று முன்தினம் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 31 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட குறிப்பிட்ட 31 பேரில் இரு பெண்கள் உட்பட 9 பேர் புலிகளுடன் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளதை தமது விசாரணைகளின் போது ஒப்புக்கொண்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் நீதிமன்றின் உத்தரவுக்கமைய எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களை விடுவிப்பதற்குரிய நவடிக்கைகளை பொலீஸார் மேற்கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-12)

# தமிழகம் திண்டிவனத்தில் கார்க் குண்டு வெடிப்பு!

## 25 பேர் பலி; 50பேர் காயம்! புளியமரத்தில் சடலங்கள்!!

சென்னை,ஏப்.8

**திண்டிவனத்துக்கு 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செண்டூர் என்றும் கிராமப் பகுதியில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 25 பேர் பலியானார்கள்; 50 பேர் காயமுற்றனர். பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இச்சம்பவம் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது.**

தமிழ்நாட்டையே அதிரச் செய்துள்ள கார்க்குண்டு வெடிப்பு முதலாவது தடவையாக இங்கு நடைபெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது-

சென்னையில் இருந்து புதுச்சேரி நோக்கிப் பயணம் செய்த பழைய 'அம்பாசிடர்' காரிலேயே குண்டு வெடித்தது.

செண்டூரில் கார் பயணம் செய்துகொண்டிந்தபோது திடீரெனப் புகை கிளம்பியது. அதில் பயணம் செய்த மூன்று இளைஞர்கள் காரிலிருந்து இறங்கி ஓட்டம் பிடித்தனர்.

காரிலிருந்து புகை வருவதைக் கண்ட அப்பகுதி மக்கள் வேடிக்கை பார்க்கத் திரண்டனர். சில நிமிட நேரத்தில் காருக்குள் இருந்து குண்டுகள் வெடித்தன. கார் மேலே வீசப்பட்டு சுக்குநூறாகியது. கார் இருந்த இடத்தில் 6 அடி பள்ளம் உண்டானது.

அந்த இடத்திலேயே 15 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். அருகே இருந்த சுமார் 25 வீடுகள் இடிந்ததோடு தீப்பற்றியும் எரிந்தன. வீடுகளுக்குள் இருந்த சிலரும் சிக்குண்டு மரணமானார்கள்.

செண்டூர் வீதியில் நிற்கும் புளியமரங்களில் புளி உலுப்பியவர்களும் கார்க்குண்டு வெடிப்பில் பலியானார்கள். அவர்களின் சடலங்கள் புளிய மரங்களில் தொங்கிக் காணப்பட்டன.

செண்டூர் கிராமத்தை அதிரவைத்த இந்தக் கார்க் குண்டு வெடிப்பில் மேலும் 60 பேர் சிக்கிக் கொண்டனர். இவர்களில் 50 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு திண்டிவனம், விழுப்புரம், ஜிப்மர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

**ஆர்.டி.எக்ஸ் வகைக் குண்டுகள்**

காரில் வெடித்த குண்டுகள் ஆர்.டி.எக்ஸ் வகையைச் சேர்ந்தவை என்று பொலீஸார் நடத்திய முதல் கட்ட சோதனையில் தெரியவந்துள்ளது. இந்த ஆர்.டி.எக்ஸ் குண்டுகள் யாருக்காக, எங்கு கொண்டு செல்லப்பட்டன என்ற விவரம் தெரியவில்லை. தமிழ்நாட்டில் இதுவரை இத்தகைய கார்குண்டு வெடித்தது இல்லை. இதில் தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டு இருக்கலாம் என்று பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் சந்தேகம் எழுப்பினார்.

குண்டுவெடிப்பில் சிக்கிய காரின் இலக்கம் டி.சி.கியூ. 3033 என்று தெரியவந்துள்ளது. இது மிகவும் பழைய மொடல் அம்பாசிடர் காராகும். குப்பையில் வீசப்பட்ட இந்தக் காரை விலைக்கு வாங்கி அதில் மர்மப் பேர்வழிகள் வெடி குண்டுகளைக் கடத்தி இருப்பது தெரியவந்துள்ளது. (அ)

# நீதியான தீர்வும் அமைதியும் கிடைப்பதற்கு அனைவரும் இதய சுத்தியுடன் உழைக்க வேண்டும்

## யாழ். ஆயர் ஈஸ்ரர் தினச் செய்தி



யாழ்ப்பாணம், ஏப்.8

இலங்கையில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வும் அமைதி வாழ்வும் ஏற்படுவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்ட அனைவரும் இதயசுத்தியுடன் உழைக்கவேண்டும். இதனை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

பாரிய யுத்தத்திற்கான நகர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் குடாநாட்டு மக்களின் பயங்கர அனுபவங்கள் சொல்லும் தரமன்று.

இவ்வாறு யாழ். ஆயர்மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தமது ஈஸ்ரர் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இன்று ஆட்கடத்தல்களும் காணாமல் போதல்களும் படுகொலைகளும் அன்றாட நிகழ்வுகளாகவிட்ட நிலையில் பயத்திலும் பதற்றத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையும் பட்டினிச் சாவும் போக்குவரத்து வசதியும் அற்ற நிலையில் உதவிக்கான அழுகையின் குரல்களே எல்லாப் பக்கங்களிலும் கேட்கின்றன. இந்த திறந்த சிறைச்சாலை வாழ்வை விட்டு வெளியே தப்பியோடவே மக்கள் துடிக்கின்றனர். நெஞ்சை அதிர வைக்கும் பயங்கர சத்தத்தங்களும் சோதனை அச்சுறுத்தல்களும் பாரிய யுத்தத்திற்கான நகர்வுகளும் நிகழ்கின்ற வேளையில் குடாநாட்டின் ஒரு சிறிய பகுதியிலே வசதிகள் அற்ற நிலையில் தனித்துவிடப்பட்ட கைதிகள் போல வாழ்கின்ற எமது பயங்கர அனுபவத்தின் துன்ப துயரங்கள் சொல்லும்தரமன்று.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற பாரிய யுத்தத்தையும் அதன் விளைவாக ஏறக்குறைய ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து பசி, பட்டினி, நோய், பாதுகாப்பின்மை போன்றவற்றால் அனுபவிக்கும் வேதனைகளையும் மட்டக்களப்பு ஆயர் பல இடங்களில் சோகத்தோடு தெரிவித்துள்ளார். மன்னார் பகுதியில் குறிப்பாக மடுப்பிரதேசத்தில் இன்று நடைபெறும் யுத்தத்தின் வேதனை மிக்க அனுபவங்கள் நாம் அறிந்ததே.

முகமது நபியின் பிறப்பு விழாவை இஸ்லாமிய சமய சகோதரர்கள் கொண்டாடும் வேளை சிங்கள தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களும் முன்னெடுக்கின்ற நிலையில் நாம் வழங்கும் (06ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலைப் பிரதமராக்கும் முயற்சிகள் ஆரம்பம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கான தீவிர முயற்சிகள் அரசியல் அரங்கில் இடம்பெற்று வருவதாக அறியப்படுகிறது.

அரசாங்கத் தரப்பில் இப்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் 35 பேர் ஐக்கிய தேசியக் கட்சிப் பக்கம் வரக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி அண்மையில் அரசதரப்புடன் சேர்ந்து கொண்ட 16 எம்.பிக்களில் நால்வர் இன்னும் ஒரு சில நாள்களில் தமது பழைய கட்சிக்கு மாறலாம் என்றும் அறியவருகிறது. (அ)

எமது பிரதேசத்திற்கு வரும் புதியவர்களுக்கு பிரதேசத்திலுள்ள மிதிவெடி அபாயப் பிரதேசங்கள் பற்றி தெரியப்படுத்துவோம்

சர்வோதயம் வெண்புறா புனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நல்லூர் பிரதேச சபை
### திருநெல்வேலி

திருநெல்வேலிச் சந்தை வாகனத்தரிப்பிட வரி அறவீடு மற்றும் கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடிப்பு - 2007

**27.03.2007 ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ் குறிப்பிட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 11.04.2007 புதன்கிழமை மு.ப. 12 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 12.04.2007 வியாழக்கிழமை நண்பகல்12 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி 12.04.2007 வியாழக்கிழமை பி.ப. 2 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*05.04.2007*

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-48894)

## கண்ணீர் அஞ்சலி

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியாரின் பாரியார்

### ஸ்ரீமதி சுபாஷினி அவர்கள்

05.04.2007 அன்று அதிகாலை 4 மணிக்கு தேகவியோகமுற்றார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.04.2007) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு 7ஆவது ஒழுங்கை, புளுமெண்டால் றோட், கொழும்பு - 13 என்னும் முகவரியில் இடம்பெற்றன.

அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

கொழும்பு தொ.பே. இல:
011 2393436,
072 2422239.

சிவ நித்தியானந்தக் குருக்கள் குடும்பம்,
பிரதம அமைப்பாளர்,
சர்வதேச இந்து மத குருபீடம்,
யாழ். மாவட்டம்,சங்கானை.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் மகானந்தன் அழகேந்திரன்

(R.D.O. பிரதேச செயலகம், காரைநகர்)

எமது பிரதேச செயலகத்தில் சிரேஷ்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடைமையாற்றிய மகானந்தன் அழகேந்திரன் அவர்களின் திடீர் மறைவையொட்டி அவரது பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி அரச அதிபர் பணிமனை,
காரைநகர். (59380)

உதவி அரச அதிபரும்,
பணிமனை உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்

### *மகானந்தன் அழகேந்திரன்*

(R.D.O. வேலணை, காரைநகர் AGA Office)



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் யாழ். நகரை வசிப்பிடமாகவும் கொண்ட மகானந்தன் அழகேந்திரன் 06.04.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகானந்தன் மற்றும் சிவனேஸ்வரி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான ஜெகநாதபிள்ளை - கனகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ஜெகதேவியின் பாசமிகு கணவரும் வஜினியின் அன்பு தந்தையும் ஜெயச்சந்திரனின் (ஜெகன், தெஹிவளை **ABRNA Beauty Care** உரிமையாளர்) மாமனும் திரு. திருமதி கனகராஜா ராஜலக்ஷ்மியின் சம்பந்தியும் (கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கு), பிரேமச்சந்திரன், ஜெயந்தி, சாந்தி, சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் ஜெகதீஸ்வரி, ஜெகபாணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை இல. 155, 3ஆம் குறுக்குத்தெரு, இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*155, 3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (39370)

தகவல்:
மனைவி, மகள், மருமகன்.

### *குழந்தை சின்னத்துரை*



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தை சின்னத்துரை 04.04.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா, குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரலிங்கம்(கொழும்பு), தியாகலிங்கம் (அரியம்), விமலாதேவி (ஜேர்மனி), யோகலிங்கம் (ஜெயம்) சாரதாதேவி கணேசலிங்கம் (ராதா - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோர்ஜ்கிங், சரஸ்வதி, புவனேஸ் வரி, முருகமூர்த்தி, சசிகலா, ஜெயந்தி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும் சுவிஸ்ரன், ருவின்சன், ஜெசானா (ஜேர்மனி),றகிநாஸ், இசானிக்கா (சுவிஸ்), ஸ்ரீகாந்த், நாகேந்திரப்பிரசாத் (கொழும்பு), சாருஜன், வியாசன், சயித்தனா, திலக்ஷன், தனுஷியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி வடக்கு, மானிப்பாய்.* (39370) தகவல்: குடும்பத்தினர்.

## விற்றுத்தீர்த்தல்

செங்கை ஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் மற்றும் புனைகதையல்லா நூல்கள், யாழ். இலக்கிய வட்டத்தின் சுதந்திரன் கதைகள், சிற்பி, அராலியூர் சுந்தரம்பிள்ளை, கே.வி. நடராஜன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, தேவன் யாழ்ப்பாணம், கனக செந்திநாதன் ஆகியோரின் நூல்கள் என்பன 50 வீதக் கழிவுடன் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன. காலம்: ஏப்ரல் 15 வரை. மு.ப. 10 மணி தொடக்கம் ஒரு மணிவரை. 145 XXXX பஜாஜ் ஸ்கூட்டர் ஒன்று மலிவு விலையில்.

கமலம் பதிப்பகம், 1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு



*10 அடி Korean தயாரிப்பு டிஸ் அன்ரனா LNB உடன் விற்பனைக்குண்டு.*

T.P.: 0777 283795.

## தவறிவிட்டது

நிலாயினி சண்முகசுந்தரம் என்பவரது தேசிய அ. அட்டையும் கையடக்கத் தொலைபேசியும் அடங்கிய சிறிய கைப்பை யாழ். பஸ் நிலையத்திற்கும் (கே.கே.எஸ். வீதி) கோண்டாவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'நிலாயினி சண்முகசுந்தரம், வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (59363)

## கார் விற்பனைக்கு

*யாழ்ப்பாணத்தில் 301 - தொடர் இலக்கமுடைய MARUTI 800 நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குள்ளது.*

*தொடர்புகளுக்கு: 011 - 2805344.*

## விற்பனைக்கு

RNF - 250 *சிங்கர் பிறிஜ் விற்பனைக்குண்டு.*

தொடர்பு: அம்பாள் மில், மல்லாகம் சந்தி, சங்கானை. Or
யூட் போட்டோ, சின்னக்கடை.
தொ.பே. 0776 668918. (59364)

## தவறிவிட்டது

பௌசிகா மகாலிங்கம் என்பவருடைய ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியுடைய தே.அ. அட்டை (இல. 855390353V) விசேட அ. அட்டை (இல. 0902029749) மற்றும் பல்கலைக்கழக அ. அட்டை என்பன கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் கிழக்கு சந்தியிலுள்ள சோதி கடையில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59366)

## ஒத்து மாறல்

*யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒருவர் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.*

**தொலைபேசி இல. : 222 9858, 2599056.**

(சி-52201)

## கார் விற்பனைக்கு

டாக்டரின் தனிப்பாவனையிலுள்ள KIA - Spectra கார் Silver Colour, Full Option WP JB xxxx இலக்கம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775018155, Dr. M. உமாசங்கர்
பார்வையிடும் இடம்: யாழ்.போதனா வைத்தியசாலை.

## விற்பனைக்கு

*அசல் பஜாஜ் முச்சக்கர, இரு சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் மொத்த விற்பனைக்கு உள்ளன.*

**தொடர்பு: ஆரணி ஓட்டோர்ஸ் ஸ்பெயார்ஸ்**

*ஞானவைரவர் கோயிலடி,கோப்பாய் றோட், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.தொ.பே.: 222 6942*

சந்திக்கும் நேரம்: காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும். குறிப்பிட்ட தினங்களில் மாத்திரம்.
(05.04.2007 தொடக்கம் 18.04.2007 வரை)

## சேவை அறிவித்தல்

I. அரைக்கும் ஆலை
 1. ஈர அரிசி மா வறுத்தல் - 15/-
 2. அனைத்து வகையான அரைத்தல் வேலைகள்.
II. சுத்திகரிப்பு நிலையம்
 1. மோட்டார் சைக்கிள் - 300/-

* மில் வேலையில் அனுபவம் உள்ளவர் தேவை.

தொடர்பு: பிருந்தா மில்ஸ், N-18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 5745.

## C.C.A
சுன்னாகம்

**O/L Day Class**

ஆரம்பம்:
09.04.2007
காலை 8 மணி.

## தேவை

வைத்தியர்களின் விடுதி ஒன்றில் சமைப்பதற்கு (மதியம், இரவு) ஆள்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
தொலைபேசி
0777399093.

## நவாலியில் பெரும்பணியாற்றிய அதிபரை பெருமையுடன் பாராட்டுகின்றோம்

நவாலி மகா வித்தியாலயத்தில் 25.07.2003 முதல் 31.03.2007 வரை பாடசாலை முதல்வராகப் பெரும்பணியாற்றிய மதிப்புக்குரிய

### புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு 01.04.2007 முதல் முதல்வராக புதிய பொறுப்பேற்றதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

நவாலி மகா வித்தியாலயத்தில் அதிபராக, நியமனம்பெற்ற காலம் முதல் நவாலி கல்வி சமூகத்திற்காகவும், பாடசாலை வளர்ச்சி - அபிவிருத்திக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்த கல்விமானை வாழ்த்துகின்றோம்.

நவாலி. (சி- 48900)

எஸ். ரமேஷ். J.P.
தலைவர், நிர்வாகிகள், நவாலி HSCMF.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திவசமும்



*அமரர்*

### செல்லத்துரை செல்வசோதி

(முன்னாள் ரியோ முகாமையாளர் - கொழும்பு)

கண்ணை இமை காப்பது போல் காத்த நீரும்
திண்ணமாய் இருப்பீரென நாமும் நேர்ந்து
வண்ணமுகம் பார்த்து வாழ்ந்தோமே
தண்ணொளியாய்த் திகழும் நீரோ
கண்ணொளியிவின்றும் மறைந்து
விண்ணொளியாய் மாறியதுமேனோ.

அன்னாரின் நினைவாக இன்று (08.04.2007) நடைபெறும் வீட்டுப் பூசை, மதிய உணவு என்பவற்றில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*859, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (59241)

மனைவி, சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இரத்தினம் புனிதராசா

(செல்வராசா)

(சன்றைஸ் ரேடர்ஸ், சாவகச்சேரி)

**தோற்றம்: 02 - 06 - 1961**
**மறைவு: 23 - 03 - 1999**

திதி: சஷ்டி 08.04.2007

பாரினிலே உத்தமராய் வாழ்ந்து
இன்றோடு எட்டாண்டு ஆனதையா
எந்நாளும் உமை நினைத்தே இப்பூவுலகில்
நாம் வாழ்கின்றோம்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (59190)

அன்பு மனைவி, மக்கள், தாய்,
தந்தை, சகோதரர்கள், மாமி,
மச்சான்மார், மச்சாள்மார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி செல்வராணி ஜெகதீசன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லம்மா

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(59329)

பி/ உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்.

## நீங்காத நினைவில்....

**20ஆம் ஆண்டு**

மலர்வு 10 ★ 12 ★ 1935



உதிர்வு 30 ★ 03 ★ 1987

அருளம்மா செபநாயகம்

**5ஆம் ஆண்டு**

மலர்வு 27 ★ 01 ★ 1932



உதிர்வு 08 ★ 04 ★ 2002

கிறிசோஸ்ரம் செபநாயகம்

"எங்களுக்கு உயிர்மூச்சை அளித்து எம்மை
வளர்த்து உருவாக்கிய உங்களை
என்றும் அன்புடன் நினைவு கூரும்"

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (59300)

பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே.: 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## இராணுவ ஆட்சிமுறைப் போக்கை தொடர விரும்பும் தென்னிலங்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது பெரும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடுத்து, அவர்களைப் பலவீனப்படுத்தி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமரச முயற்சிகளில் தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலுவை உடைத்து நொறுக்கிய பின்னர், தான் விரும்பிய தீர்வு ஒன்றைத் தமிழர் மீது திணிப்பதே மஹிந்த அரசின் உபாயமாகத் தோன்றுகின்றது.

குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வுடன் இலங்கைத் தீவில் பௌத்த - சிங்கள அரசின் மேலாண்மைப் பலத்தை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்தும் சிந்தனைப் போக்கில் அமைந்த இந்தப் பேரினவாதக் கருத்து நிலைப்பாடு யதார்த்தத்தில் சாத்தியமாகப் போவதில்லை என்பதைத் தென்னிலைங்கை அரசியல் பேராசிரியர் ஒருவர் 'மௌபிம' சிங்களப் பத்திரிகையில் தான் வெளியிட்ட கருத்தாய்வுக் கட்டுரையில் தெட்டத்தெளிவாக அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு போரியல் நடவடிக்கைகள் மூலமும், யுத்த மோதல்கள் வாயிலாகவும் குறுகியகாலத் தீர்வு ஒன்றைத் திணித்து விடும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் எத்தனிப்பு தூரநோக்கற்றது; தீர்க்கதரிசனம் இல்லாதது; சிறுபிள்ளைத்தனமானது என்று சாடுகின்றார் அவர்.

இத்தகைய தீர்வு ஒன்றைத் திணிக்கும் ஆட்சியாளர்களின் முயற்சி குறித்து தென்னிலங்கைக்கும் அவர் ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். அந்த எச்சரிக்கையைத் தென்னிலங்கை உள்வாங்கிக் கருத்தில் எடுத்துக்கொண்டதா என்பது சந்தேகமே.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி, தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலிமையை உடைத்தபின்னர் தாங்கள் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர்கள் மீது திணிக்கும் தற்போதைய ஆட்சியாளர்களின் எத்தனத்தின் பின்னணியில் புதைந்துகிடக்கும் ஆபத்தை, தென்னிலங்கை இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அதனால் தான் இந்த இராணுவ வெறித்திட்டத்திற்குத் தென்னிலங்கை அமோக ஆதரவும் வரவேற்பும் கொடுக்கின்றது என்றும் தென்னிலங்கைப் புத்திஜீவிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதும், அதன்மூலம் தமிழர் தரப்பின் பேரம்பேசும் வலிமையை உடைப்பதும், அதன்பின்பு தென்னிலங்கை விரும்பும் - அது 'பிச்சையாகப் போடும்' - தீர்வைத் தமிழர்கள் மீது திணிப்பதும் ஆகிய இந்தக் கனவுகள் சாத்தியமானவை தானா என்பது ஒருபுறம் இருக்க, இவ்வளவும் நடந்தேறினால் - அதன்பின்னர் தென்னிலங்கையில் என்ன நடக்கும் என்பதை தென்னிலங்கை மக்கள் சிந்தித்துப் பார்க்கவேயில்லை. சிந்தித்துப் பார்க்கும் மனப்பக்குவமும் அவர்களுக்கு இல்லை என்கின்றனர் ஓரளவு சிந்திக்கும் இயல்பும் தீர்க்க தரிசனப் பார்வையுமுடைய தென்னிலங்கைப் புத்திஜீவிகள்.

ஏற்கனவே அடக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்ட தமிழர்கள் தங்கள் விடுதலைக்காக - தங்களின் இன சுதந்திரத்திற்காக - ஆயிரக் கணக்கில் உயிர்களையும் சொல்லில் அடங்காத அளவுக்கு உடைமைகளையும் - ஏன் தலைமுறைகளைக் கூட - தொலைத்துக் கடும் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள் என்பது கண்கூடு.

இராணுவ ரீதியில் தங்களை அடக்கி, ஒடுக்கி, பலவீனப்படுத்திய பின்னர், தம்மீது திணிக்கப்படும் அரைகுறையாக - உருப்படியற்ற - தீர்வுத்திட்டத்தை தமிழர்கள் மேலும் வெஞ்சினம் கொண்டு, ஆக்ரோஷமாகவும் கடும் தீவிரத்துடனும் எதிர்ப்பார்கள் என்பது நிச்சயம்.

ஆகவே, இராணுவ ரீதியில் தமிழர்களைப் பலவீனப்படுத்திய பின்னர், அவர்கள் மீது தென்னிலங்கை விரும்பும் 'அரை வேக்காட்டு அரசியல் தீர்வு' திணிக்கப்படுமானால், அந்தத் தீர்வைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, செயற்படுத்துவதற்குத் தென்னிலங்கையில் இப்போதும் உள்ளதுபோன்ற இராணுவப் பின்புலஆட்சிமுறை அல்லது நேரடி இராணுவ ஆட்சிமுறையே தொடர்ந்து இருக்கவேண்டிய கட்டாயம் நிலவும்.

துப்பாக்கிகளின் அதிகாரத்தில் ஆட்சியைத் தொடரவிரும்பும் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அவர்கள் விரும்புவது. இத்தகைய ஒரு நிலையையே ஆகும் .

அரசியல் ரீதியான சவால்களை ஆயுத முனையில் அடக்கி தங்களின் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதாயின், ஆயுத பின்புல பலத்தினாலான தமது தற்போதைய ஒழுங்குமுறை தொடரவேண்டும் என்பதே அவர்களது எண்ணமாகும்.

தமிழர்களுக்கு உரியதை - அவர்களது அபிலாஷைகளை நிறைவுசெய்கின்ற - நீதியான, நியாயமான - தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்து, தமிழர் தரப்பைத் திருப்திப்படவைத்து, அதன்மூலம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் கண்டுவிட்டால் இந்த நாட்டில் ஆட்சியில் இருக்கும் எந்த அரசும் இராணுவ ஆட்சிமுறைப் போக்கைப் பின்பற்றவே முடியாத சுமுக நிலைமை ஏற்படும். அமைதியான - யுத்தமற்ற - போர் ஓய்ந்த - ஒரு நேரத்தில் முழு ஜனநாயகக் கட்டமைப்புடன் கூடிய ஆட்சியையே தொடரவேண்டிய கட்டாயம் அதிகாரத்தில் இருக்கும் தலைவர்களுக்கு ஏற்படும்.

ஆனால், ஆயுத அதிகாரப்போக்குடன் கூடிய ஆட்சிமுறையை நடத்திவந்த - நடத்திவருகின்ற - தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு, அத்தகைய இராணுவ முறைமையிலான ஆட்சிமுறையைக் கைவிடுவது அத்தனை சுலபமானது அல்ல. அவர்கள் அதிலே ஊறித்திளைத்து ருசி கண்டவர்கள்.

ஜனநாயக ஆட்சி அதிகாரக் கதிரையில் இருந்தால், இராணுவ ஆட்சிமுறை அதிகாரங்களைப் பிரயோகிக்கும் - செயற்பாடுகளைச் செயற்படுத்தும் நமைச்சல் - அரிப்பு - அவர்களுக்குத் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

அதனால்தான் தெற்கில் தொடர்ந்தும் இராணுவப் பின்புல ஆட்சிமுறையுடன் கூடிய அதிகார ஏற்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதை உறுதிப்படுத்தும் காய்நகர்த்தல்களை இந்த ஆட்சியாளர்கள் செய்கின்றனர்.

தமிழரின் தேசியப் பிரச்சினையை அமைதி வழிப் பேச்சுமூலம் - சமாதான எத்தனங்கள் வாயிலாக - எட்டுவதற்கு அதிக வாய்ப்புகள் இருந்தும் அவற்றையெல்லாம் உதாசீனம் செய்துவிட்டு இராணுவ வழித் தீர்வை மஹிந்த அரசு நாடுவதற்கான பின்னணிக் காரணங்களுள் இதுவும் முக்கியமான ஒன்றாகும்.

# புதுவருடக் கொள்வனவில் மக்கள் நாட்டம்; ஆயினும் மனம்பூரித்த மலர்ச்சி தென்படவில்லை

மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், அச்சங்கள், கவலைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் இம்முறை தமிழ் - சிங்களப் புத்தாண்டு பிறக்கப் போகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள், போர் வெடிக்கும் அபாய நிலை என்பவற்றுக்கு இடையில் இம்முறை புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு மன நிம்மதி அற்ற நிலையில் தமிழ் மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவது யார் காதுகளில் விழப்போகிறது?

குறிப்பாகக் குடாநாட்டு மக்கள், முன்னர் எப்போதும் இல்லாதவகையில் உயிர் அச்சத்தின் மத்தியில் மிகவும் நெருக்கடியான சூழலுக்குள் சிக்கிக் கொண்டு 'மூச்சு' விடமுடியாமல் அச்ச சுபாவத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எந்த வேளையிலும் என்ன நிகழுமோ? என்ற ஏக்கமும் பயமும் அவர்களது மனதை வாட்ட, ஒரு நிம்மதியற்ற - அமைதியற்ற - நிலையில் அவர்களின் அன்றாடப் பொழுது கழிகின்றது.

காலையில் வீட்டில் இருந்து வேலைக்கு அல்லது கல்விக்கு அல்லது வேறு தேவைகளுக்கென வெளியே புறப்பட்டவர்கள் மீண்டும் பத்திரமாக வீடு திரும்புவார்களா என்ற மனப்பயம் அனைவரது மனங்களிலும் குடிகொண்டுள்ளது.

அன்றாடம் கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல், காணாமற்போதல், பாலியல் துன்புறுத்தல் எனப் பலவாறான மனித உரிமை மீறல்களுக்கு மத்தியில் வாழ்வை ஓட்டவேண்டிய இக்கட்டான நிலை குடாநாட்டு மக்களுக்கு.

இத்தகைய முற்றிலும் வித்தியாசமான சூழ்நிலைக்குள் இம்முறை சித்திரைப் புத்தாண்டு பிறக்கப்போகின்றது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டார்கள்.

உணவுப் பற்றாக்குறை, பொருள்களின் விலையேற்றம், வெளியிடங்களுக்கான போக்குவரத்துப் பிரச்சினை என்பவற்றால் குடாநாட்டு மக்கள் கடந்த பல மாதங்களாக பல்வேறு சிரமங்களையும், துன்பங்களையும் எதிர்கொண்டார்கள்.

இந்தப் பிரச்சினைகளால் குடாநாட்டில் சாதாரண மக்கள் மட்டத்தில் மட்டுமல்ல அனைத்து மட்டங்களிலும் பல்வேறு சிக்கல்கள் தோன்றின. குடாநாட்டில் பொருளாதார நிலைமை சில மாதங்களாக இறங்குமுகமாகி சீர்கெட்டிருந்தது.

யாழ். அரச அதிபர் மட்டுமே கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவந்து மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருந்தது.

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இந்தப் பொருள்கள் குடாநாட்டு மக்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் அத்தியாவசியப் பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியது.

ஏற்கனவே தமது களஞ்சியங்களில் இருப்பில் வைத்திருந்த பொருள்களை வியாபாரிகள் பன்மடங்கு அதிகரித்த விலையில் விற்பனைசெய்தனர். இதனால் தமக்குத் தேவையான பொருள்கள் இருந்தும் அவற்றைக் கூடிய விலைக்குக் கொள்வனவு செய்யமுடியாமையால் மக்கள் பரிதவித்தமை அனைவருக்கும் தெரியும். குறிப்பாக அரிசி, மா, சீனி, சவர்க்காரம், தேங்காய் எண்ணெய் போன்ற மிக முக்கிய அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சொல்லமுடியாத அளவுக்கு எகிறியிருந்தன.

### மறுக்கமுடியாத, மறக்கமுடியாத யதார்த்தம்

கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவருவதற்கு பல்வேறு முயற்சிகள் அரச அதிபரால் மேற்கொள்ளப்பட்டபோதும் அரச உயர் மட்டங்கள் விதித்த சில நடைமுறைகள் காரணமாகப் போதியளவு பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டுவரமுடியவில்லை.

ஒருபுறத்தில் குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அரச உயர்மட்டங்களில் இருந்து அறிக்கைகள் வெளியாகிக்கொண்டிருந்த வேளையில், யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் பொருள்களைப் பெற மக்கள் வரிசையில் நீண்டநேரம் காத்துநிற்கின்றமையையே கள யதார்த்தமாக இருந்தது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் இவ்வாண்டு ஜனவரி மாதம் வரை அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து நிலவியதை எந்தக் குடாநாட்டுப் பொதுமகனும் மறந்திருக்கமாட்டான்; மறுக்கமாட்டான்.

ஆயினும், இந்த நிலைமை இப்போது ஓரளவு நீங்கியுள்ளது.

குடாநாட்டுக்கு விஜயத்தை மேற்கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அரசுக்கு கொடுத்த தொடர்ச்சியான அழுத்தங்கள், உண்மைநிலை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகள், யாழ். அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இப்போது குடாநாட்டின் உணவு நிலை பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

அரிசி, மா, சீனி, சவர்க்காரம் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மட்டுமல்லாது தனியார் கடைகளிலும் கட்டுப்பாட்டு விலையில் பெறக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த மருந்துப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களையும் இப்போது பெற்றுக்கொள்ளவும் கூடியதாக உள்ளது.

தனியார் வியாபாரிகளும் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவந்தமை இந்த நிலை ஏற்படக் காரணமாக அமைந்தது.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் எட்டுக்கு மேற்பட்ட தடவைகள் தனியாரால் கப்பல்களில் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேவையான பொருள்களில் பலவும் கப்பல் மூலம் குடாநாட்டுக்குக் கொண்டுவரப்படுவதால் பொருள்களின் விலைகள் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளன.

### கொண்டாடப்படாத பண்டிகைகள்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிறிஸ்மஸ், ஆங்கிலப் புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளை குடாநாட்டு மக்கள் ஏனைய வருடங்கள் போன்று பெரும் எடுப்பில் கொண்டாடாமல் அமைதியாகக் கொண்டாடினார்கள்.

அப்போது குடாநாட்டில் போதியளவு பொருள்களைப் பெறமுடியாத நிலைமை இருந்தமையே அதற்குக் காரணமாகும்.

ஆனால்,இப்போது நிலைமை அவ்வாறில்லை. சித்திரைப் புத்தாண்டுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் தற்போது கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு வியாபார நிலையங்களில் விற்பனைக்கு வந்துள்ளன.

**பார்த்ததின் பதிவுகள்**

கடந்த ஒகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் இம்முறை முதற்தடவையாக உடுபுடைவைகளும் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

சித்திரைப் புத்தாண்டுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் இப்போது கடைகளில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

இதனால், இம்முறை சித்திரைப் புத்தாண்டை சராசரியாகவேணும் கொண்டாடுவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராகி வருகின்றனர்.

புத்தாண்டு வியாபாரம் யாழ். நகரில் களைகட்டத் தொடங்கியிருக்கிறது.

### அலைமோதும் மக்கள் கூட்டம்

பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களை நடைபாதை வியாபாரிகளிடமும், வர்த்தக நிலையங்களிலும் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

புதிய உடுபுடைவைகள் பெருந்தொகையில் விற்பனைக்கு வந்துள்ளன. யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகள், மின்சார நிலைய வீதியில் உள்ள புடைவைக் கடைகள் என்பவற்றின் முன்னால் இவை குவிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொள்வனவு செய்யவென மக்கள் கூட்டம் அலைமோதுகின்றது.

உடுபுடைவைகளின் விலைகள் முன்னரைவிட அதிகமாக உள்ளபோதும் மக்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மக்கள் கூட்டம் இல்லாமையால் வெறிச்சோடிக் காணப்பட்ட யாழ். நகரப் பகுதி இப்போது மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது.

யாழ். நகரப் பகுதி வங்கிகளிலும் என்றுமில்லாதவாறு இம்முறை மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. வழமையைவிட இம்முறை வெளிநாட்டில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட பணத்தைப் பெற வங்கிகளுக்கு கூடுதலான மக்கள் வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

### முகத்தில் மலர்ச்சி இன்றி...

ஒட்டுமொத்தத்தில் சித்திரைப் புத்தாண்டை சராசரியாகக் கொண்டாட மக்கள் ஆயத்தமானாலும், அவர்கள் முகத்தில் மலர்ச்சியைக் காண்பது அரிதாகவே உள்ளது. அதற்கான காரணங்கள் சொல்லித் தெரியவேண்டியவை அல்ல.

அன்றாடம் இரவுபகல் பாராது துப்பாக்கி முனையில் மேற்கொள்ளப்படும் கொள்ளை முயற்சிகள் இப்போது குடாநாட்டு மக்களின் நிம்மதியான நித்திரையைக் கெடுத்துள்ளதையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

மக்கள் சித்திரைப் புத்தாண்டை மனக்களிப்புடன் கொண்டாடுகின்றார்களோ இல்லையோ; அதற்கான புறச்சூழல் இருளடைந்து கிடக்கன்றதோ இல்லையோ சித்திரைப் புத்தாண்டு பிறக்கப் போகிறது! பிறக்கும் புத்தாண்டின் பின்னரேனும் ஓர் அமைதியான - நிம்மதியான சூழல் ஏற்பட்டு முன்னரைப்போன்று தடங்கலற்ற இயல்பு வாழ்க்கை நடத்தக்கூடிய ஒரு நிலைமை உருவாகாதா என்ற ஏக்கம் குடாநாட்டு மக்களின் மனங்களில் உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்குரிய பலன் கிடைக்கவேண்டும் எனப் பிறக்கவுள்ள புத்தாண்டில் அனைவரும் பிரார்த்திப்போமாக!

- அதிரன்.

## நாளை

பங்குனி - 26
திங்கட்கிழமை
09.04.2007
திதி: சஷ்டி
காலை: 07.25
நட்சத்திரம்: மூலம்
முன்னிரவு : 07.16
சுபநேரம் : 12.07-01.37
ராகுகாலம் : 07.37-09.07

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**முறைசாராக் கல்விப் பிரிவு**
**கணனி பயிற்சிநெறி**

*பாடசாலையைவிட்டு விலகியோருக்கான கணனி பயிற்சிநெறி 11.04.2007 அன்று மு.ப 10.00 மணிக்கு மேற்படி பிரிவில் ஆரம்பமாகவுள்ளதால் இப்பயிற்சிநெறியை பின்பற்றவுள்ளோர் இத்திகதிக்கு முன் னர் கல்லூரி அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.*

(சி/48889) - அதிபர்.

**INVITATION**

The Service of Installation
of
The Revd. N. Jameson Gnanaponrajah
as
25th Principal of St. John's College
by
The Rt. Revd. Duleep de Chickera,
Bishop of Colombo
will be held on
Tuesday 10th April 2007
at 9.00 am.
at
St.John the Baptist's Church, Chundikuli.
Parents, Old Boys and Well-wishers are invited.

(சி/48880) *Students and Staff*
St. John's College, Jaffna.

**குடியியல் நடைமுறைக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்**

முத்துக்குமாரு செல்லப்பா,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
வழக்காளி

வழ. இல.: நானாவிதம். 81/05

எதிராக
1) திருப்பணிச் சபை,
ஆயர்கடவைப் பிள்ளையார் கோயில்,
புன்னாலைக்கட்டுவன்.
2) ஏரம்பமூர்த்தி உதயகுமார்,
தலைவர்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
3) நவரத்தினம் ஜெயக்குமார்,
செயலாளர்,
மீசாலை தெற்கு.
4) சுப்பிரமணியம் சின்னப்பா,
பொருளாளர்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
எதிராளிகள்

மேலே குறித்த இலக்கம் கொண்ட வழக்கில் புன்னாலைக்கட்டுவன் ஆயர்கடவைப் பிள்ளையார் கோயில் விடயமாக அக்கோயிலின் திருப்பணிச் சபைச் செயற்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி சபையைப் புனரமைக்க ஏதுவாக புதிய சபை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி வழக்காளியால் எதிராளிகளுக்கு எதிராக இம்மன்றில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மன்றினால் தினசரிப் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இவ்விடயம் தொடர்பாக அக்கறையுள்ள ஆள் எவரும் 2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 03ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி மேலே கூறப்பட்ட ஆலய திருப்பணிச் சபை மாற்றமடையவேண்டும் என்பதற்காக ஏதாவது காரணம் தங்களுக்கு இருப்பின் தெரியப்படுத்துமாறு இத்தால் நீங்கள் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

2007 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி

வரைந்தது
இ.வசந்தசேனன்
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
ம.செல்வரத்தினம்
பதிவாளர்,மாவட்ட/நீதவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விமானப்படைத் தளம் மீது திங்கள் அதிகாலை விழுந்த மாபெரும் பேரிடி!



நள்ளிரவை அண்மித்த நேரம் கணேசபுரம் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் இருந்த படையினர் தமக்கு மேலாக - மன்னாருக்கும் வவுனியாவுக்கும் இடையில் - விமானங்கள் இரையும் சத்தத்தைக் கேட்டனர். தெளிவாக ஒன்றும் தெரியா விட்டாலும் அந்த இரைச்சல் பதிவாகப் பறந்து செல்லும் இரண்டு இலகு ரக விமானங்களால் எழுப்பப்படுவது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். இது அவர்களுக்கு சந்தேகத்தை எழுப்புவதாக இருந்தது. உடனடியாக செயற்பட்ட பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் சன்னா சிறிமானே, வவுனியாவிலுள்ள விமானத்தளத்துக்கு தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவித்தார். அவருக்குக் கொழும்பிலுள்ள விமானப்படையின் நடவடிக்கை அறையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அவர் தனது தகவலை விவரித்தார். அத்துடன் கொழும்பிலுள்ள விமானப்படைத் தலைமையகத்தை எச்சரிக்கவும் செய்தார்.

பின்னர் தமது நிலையப் பதிவுப் புத்தகத்திலும் அந்த விவரத்தைப் பதிந்து வைத்தார். அவரது சகாவான உப்புல் ஜயவர்த்தனவும் அவ்வாறு பதிவுப் புத்தகத்தில் பதிந்து வைத்தார்.

அடுத்து, அனுராதபுரத்திலும் வவுனியாவிலும் உள்ள விமானப்படைத் தளங்கள் செயலில் இறங்கின. மின்சார வெளிச்சங்களை அணைத்தனர். வவுனியா இராணுவத் தளத்திலும் அவ்வாறே செய்யப்பட்டது.

முக்கிய இடங்களில் காவல்கள் இறுக்கப்பட்டன. இதேவேளை கொழும்பிலும் சர்வதேச விமானசேவை ஏதும் வன்னி வான் பரப்பினூடாக நடைபெறுகின்றதா என்பது அவதானிக்கப்பட்டது. சிங்கப்பூர் விமான சேவையின் "சில்க் ஏயர்" சேவையொன்று அவ் வேளையில் நடைபெற இருப்பது தெரியவந்தது. அதனால் அச்சுறுத்தல் ஏதும் இல்லையென்ற அளவில் அவர்கள் அமைதியடைந்தனர். பதற்றம் தணிந்தது.

இன்னும் சில நிமிடங்களில் புலிகளின் தாக்குதல் இடம்பெறப் போவது பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதன்பின் 45நிமிடங்கள் ஓடி மறைந்தன. நள்ளிரவு கழிந்து 12.45 மணி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரம்.

### விமானப்படைத்தளம் வெடிப்பால் அதிர்ந்தது

கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப்படையின் பிரதான தளம் மூன்று பாரிய குண்டு வெடிப்புகளினால் அதிர்ந்தது. இத்தளமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஓடு பாதையினால் மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளது. ஓடு பாதை இராணுவ மற்றும் சிவிலியன் விமானங்களால் பாவிக்கப்பட்டு வருவதுமாகும்.



குண்டுகள் வெடித்த சத்தம் வெகுதூரம் வரை கேட்டது. நகரின் தெற்கிலுள்ள நுகேகொட, மிரியான பகுதிகளில் சத்தத்தைக் கேட்கக்கூடியதாக இருந்தது என்று பொலீஸார் தெரிவித்தனர். கட்டான தங்கொட்டுவ, கிம்பிலுப்பிட்டிய பகுதிகளிலும் குண்டுகள் வெடித்த சத்தத்தை மக்கள் கேட்டிருக்கிறார்கள். தொலைபேசிச் செய்திகள் பறக்கத் தொடங்கின. விமானப்

## புலிகளின் குண்டு 'கிபிர்'கள் மீது விழுந்திருந்தால்......!


படையின் பிரதான தளம் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாக! இது எப்படி நிகழ்ந்தது என்பது எல்லோருக்குமே அதிசயமாக இருந்தது. மோட்டார் தாக்குதல் நடத்தப்படுவதாக சிலர் நினைத்தார்கள். விடுதலைப்புலிகள் 2001 ஜூலையில் இடம்பெற்றது போன்று மற்றும் ஒருதடவை விமான நிலையத்திற்குள் ஊடுருவி விட்டார்களோ என வேறுசிலர் எண்ணினார்கள்.

எங்கே தவறு நடந்துள்ளது என்பதை ஆராய்ந்து கண்டுபிடிப்பதில் விமானத்தளத்தின் நடவடிக்கை அறையில் அதிகாரிகள் தலை களைப் பிய்த்துக் கொண்டிருந்தார்கள்.

விமான நிலையத்துக்கு உள்ளே வரும் விமானங்கள் அனைத்தையும் பக்கத்து நாடுகளின் வெவ்வேறு நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பும்படி கட்டளை பறந்தது. திருவனந்தபுரம், சென்னை மற்றும் மாலைதீவு விமான நிலையங்களுக்கு அவை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

### பயணிகள் பட்ட பாடு!

வெளிநாடு செல்லும் பயணிகள் தமது விமானப் பயணங்கள் குறித்து முனகத் தொடங்கினார்கள். சில பயணிகள் சிங்கப்பூர் செல்லவிருந்த விமானம் ஒன்றில் ஏறியும் இருந்தார்கள். அந்த விமானம் அதிகாலை 1.10 மணிக்குப் புறப்படவிருந்தது. பிரயாணிகள் அவசர அவசரமாக விமானத்திலிருந்து இறக்கப்பட்டார்கள். விமான நிலையப் பகுதி தாக்குதலுக்குள்ளாகியிருப்பதாக மட்டுமே அவர்கள் அறிந்திருந்தார்கள். வேறு விவரம் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.



ஹொங்கொங் புறப்படவிருந்த "கதே பசிபிக்" விமானத்தில் அச்சம் பீடித்திருந்தது. வானத்தில் அங்குமிங்குமாக வெளிச்சங்கள் பளிச்சிட்டதை விமானச் சிப்பந்திகள் அவதானித்திருந்தார்கள். துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டதையும் அவர்கள் கேட்டிருந்தார்கள். அதிரடிப்படையினரும் விமானப்படை அதிகாரிகளும் பயணிகளை அப்புறப்படுத்துவதிலும், விமான நிலையம் தாக்கப்படவில்லையென உறுதியளிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். விமான நிலைய்த்துக்கு உள்ளேயிருந்த எவரும் வெளியேறாமலும் உள்ளே வராமலும் விமான நிலையம் 'சீல்' வைக்கப்பட்டது. அனைவரும் கடுமையான சோதனைக் குட்படுத்தப்பட்டனர். இதற்கு ஏறத்தாழ இரண்டு மணித்தியாலத்துக்குமேல் பிடித்தது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குள் விடு

## தாக்குதலை நடத்திவிட்டு பத்திரமாகத் திரும்பின Zlin Z-143 ரக விமானங்கள் இரண்டு

தலைப்புலிகள் எவரும் தரைவழியாக ஊடுருவி இருக்கவில்லையென்பது தெரியவந்தது. வான் தற்காப்பு அமைப்பைச் சேர்ந்த சில விமானிகள் தமது தலைகளுக்கு மேலாக ஒருவிமானத்தின் இரைச்சல் சத்தத்தைக் கேட்டதாகக் கூறினார்கள். வெகு நேரத்துக்குப் பிறகு இன்னொரு இலகு விமானம் பறப்பதும் சில கிலோமீட்டர் தூரத்தில் கேட்டதாக அவர்கள் கூறினார்கள்.

சிப்பாய் ஒருவர் விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்றை இயக்கி வானில் குண்டுமாரி பொழிந்துதள்ளினார். இருளில் விமானங்களைத் தங்களால் பார்க்கமுடியவில்லை என்று அவர்கள் கூறினார்கள். விமான நிலையத்தில் துப்பாக்கிச்சண்டை நடைபெறுவதாக வதந்தி பரவியது. சிறிது நேரத்தில் விமானங்களின் சத்தம் மெதுவாக ஓய்ந்து முடிந்தது.

### குண்டு வீச்சின் விளைவு.....?

குண்டு வீச்சின் விளைவுகள் தெரியத்தொடங்கின. விமானப்படைத்தளத்தின் பொறியியல் பிரிவின் மீது மூன்று குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன. கூரையும் சுவர்களும் உடைந்து நொறுங்கியுள்ளன. வான் - கடல் தற்காப்புப் பிரிவைச் சேர்ந்த விமானப்படையைச் சேர்ந்த பலர் அருகாமையில் படுத்துறங்கிக்கொண்டிருந்துள்ளனர். அவசர நிலைகளில் இரவு - பகல் என்றில்லாமல் பணிக்குப் புறப்படுவதற்கு இவர்கள் தயாராகியிருந்தார்கள். இவர்களில் மூவர் கொல்லப்பட்டனர். 16பேர் காயமடைந்துள்ளனர். அருகே அமைந்த பகுதியிலிருந்த நான்கு ஹெலிகொப்டர்களுக்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டிருப்பதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். குண்டுகள் ஏற்படுத்தியருந்த அதிர்வுகளினால் கண்ணாடி யன்னல்கள் உடைந்து நொருங்கியிருந்தன. சேதமுற்ற ஐந்து ஹெலிகொப்டர்கள் பின்னர் திருத்தப்பட்டன. விமாணங்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை யென்று அதிகாரிகள் கூறினார்கள்.

குண்டுகள் விழுந்து வெடித்துள்ள இடத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த கிபிர் மற்றும் மிக்.27 ரக குண்டுவீச்சு விமானங்களையே புலிகள் இலக்கு வைத்திருந்துள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக விமானப்படையினர் நடத்திவரும் குண்டுவீச்சுக்களுக்கு எதிர் நடவடிக்கையாகவே புலிகள் இதனைச் செய்துள்ளனர்.

### கிபிர் விமானங்கள் மீது புலிகளின் குண்டுகள் விழுந்திருந்தால்...!

குண்டு வீச்சு விமானங்கள் இருந்த இடத்தில் புலிகளின் குண்டுகள் விழுந்திருப்பின் பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கும். அங்கு நின்ற விமானங்களில் சில 250 கிலோ கிராம் குண்டுகளை ஏற்றி தயார்நிலையில் நின்றுள்ளன. அவற்றின் மீது குண்டுகள் வீழ்ந்திருந்தால் அக்குண்டுகளும் வெடித்து பேரழிவு உண்டாகியிருக்கும்.

குண்டுவீச வந்த விமானிக்குச் சரியான இடம் குறிப்பாகத் தெரியாமல் போயிருக்கலாம். வழக்கமாக நிறுத்தப்பட்டிருக்கும் குண்டு வீச்சு விமானங்களின் வெளிச்சங்கள் அணைக்கப்பட்டே இருக்கும்.

### ராடர் கருவி செயற்படாமை

இந்தியாவினால் வழங்கப்பட்ட ராடர் கருவி செயற்படாமல் போனமையும் புலிகளின் விமான ஊடுருவலுக்கு வசதியாகப் போய்விட்டது. ராடர் கருவியில் திருத்த வேலைகள் நடைபெற்று செயல்திறனுடனேயே இருந்துள்ளது. ஏதோ காரணத்தினால் அது முடக்கி விடப்படாமல் இருந்துள்ளது. இத்தகவல் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்திருந்தமையால்தான் இவ்வாறான திடீர் தாக்குதலை நடத்த முடிந்ததா?

இதற்கும் இதுபோன்ற பல கேள்விகளுக்கும் விடைகளைக் காண்பதற்கான புலன் விசாரணையொன்று இரகசியப் பொலீஸ் பிரிவினால் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

### இலகு விமானங்கள் திரும்பிக்கொண்டிருந்தபோதே தெரிய வந்தது

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் இத்தாக்குதலுக்கு இரண்டு இலகு ரக விமானங்கள் பாவிக்கப்பட்டுள் ளன என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் இரண்டு இனந்தெரியாத விமானங்கள் பறப்பதை தமது ராடர் கருவியில் கவனித்திருக்கிறார்கள். அந்த வேளையில் அவை வடமேற்குத் திசையில் வன்னியை நோக்கிப் பறந்துகொண்டிருந்துள்ளன. விமானப்படை தலைமை நிலையமும் வவுனியாவிலுள்ள அதன் விமானத்தளமும் திரும்பிச் செல்லும் விமானங்களை அவதானித்து அவைகளைத் துரத்திச் சென்று தாக்குவதற்கு சீனத் தயாரிப்பான ஒ8 ரக ஜெட் பயிற்சி விமானம் ஒன்றை விண்ணில் செலுத்தியுள்ளனர். ஆனால் அது 20 நிமிட நேரம் பிந்தியே இடம்பெற்றுள்ளது. அந்த விமானங்கள் மன்னாருக்கு மேலாகப் பறந்தவேளை ராடர் திரையிலிருந்து தாக்குதல் நடத்திய விமானங்கள் மறைந்து விட்டன. எனவே பயிற்சி விமானம் தளத்துக்குத் திரும்பிவிட்டது.



மார்ச் மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை வேளையில் கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படைத் தளத்தின் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் வான்வழித் தாக்குதல் நடத்தினார்கள் அல்லவா? அந்தச் சம்பவம் தொடர்பாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் பிரபல பாதுகாப்புத்துறை விமர்சகரும், அகில உலகப் பிரபல்யம் பெற்ற பாதுகாப்புத்துறைச் சஞ்சிகையான "ஜேன்ஸ் விக்லி"யின் பிரதிநிதியுமான இக்பால் அத்தாஸ் விரிவாக எழுதியுள்ளார். அதிலிருந்து சில பகுதிகள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

### குண்டுகளைச் சுமந்து செல்லக்கூடியவை

அந்த விமானங்களைத் துரத்தித் தாக்குவதற்கு கிபிர் விமானங்களை அல்லது மிக்.27 விமானங்களைப் பயன்படுத்துவது சாத்தியமில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. பொது மக்கள் பணம் பெருமளவில் செலவாகும் என்பது ஒருபுறமிருக்க, அவற்றுக்கு வேறு சில குறைகளும் உண்டு. அவை என்ன என்பதை வெளிப்படையாகச் சொல்லமுடியாது.

கட்டுநாயக்கா விமானத் தாக்குதல் நடந்த சில மணி நேரத்தின் பின்னர் திங்கட்கிழமை காலையில் மன்னாரில் பல இடங்களில் கிபிர் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தின. அப்பகுதியில் எங்காவது அந்த இலகு விமானங்கள் தரை இறங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இது இடம்பெற்றது.

புலிகளின் இலகு விமானங்கள் தமது இலக்கு நோக்கிப் பறந்து திரும்புவதற்கு ஆகக் கூடியது 90 நிமிடங்களுக்குக் கூடுதலாக எடுத்திருக்கமாட்டார்கள் என்பது விமானப்படை அதிகாரிகளின் கருத்து.

விடுதலைப்புலிகள் இரணைமடுவில் விமானம் இறங்குதுறை ஒன்றை ஓடுபாதையுடன் அமைத்திருக்கிறார்கள். சி-130 ரக ஹெர்குலிஸ் ரக போக்குவரத்து விமானங்களும் கூட அங்கு தரை இறங்கமுடியும். ஆனால், இந்த இரண்டு விமானங்களும் அங்கிருந்துதான் புறப்பட்டிருக்க வேண்டும் என்பதில் அதிகாரிகளுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. யாழ்ப்பாணம் - கண்டி ஏ-9 பிரதான வீதிக்கு மேற்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு அமைந்துள்ளது.

புலிகளினால் வெளியிடப்பட்டுள்ள விமானங்களைக் காட்டும் படங்களின்படி குண்டுகளைச் சுமந்து செல்லக் கூடியனவாக அவைகளின் அடிப்பாகங்கள் அமைந்துள்ளன.

குண்டு வீச்சுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள விமானங்கள் செக் தயாரிப்பான Zlin Z-143 ரகத்தைச் சேர்ந்தவையென அதிகாரிகள் இனங்கண்டுள்ளனர்.

### ஒரு குண்டு வெடிக்கவில்லை

கட்டுநாயக்க விமானத்தளத்தில் வீசப்பட்ட நான்கு குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை. அதனை வெடிக்கச்செய்யும் பொறி செயற்படாமல் போயுள்ளது. இக்குண்டு உடைந்து கிடந்தமையால் அதன் அமைப்பு முறையை அதிகாரிகளால் விரிவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாகிவிட்டது. ★

தமிழில்: நந்தன்

## வான்புலிகளின் பலம் குறித்து இலங்கை, இந்தியா அறிந்து வைத்தவை

விடுதலைப் புலிகள், விமான ஓடுபாதையொன்றினை நிர்மாணித்து வருவதான தகவலை 2005ஆம் ஆண்டில் இலங்கை விமானப்படை உறுதிப்படுத்திக்கொண்ட வேளையில், விடுதலைப் புலிகள் வசம் இரண்டு விமானங்கள் மட்டும் இருப்பதாகப் பகுத்தறிந்திருந்தனர். அதன் பின்னர் இந்தியத் தரப்பிடமிருந்து இலங்கை விமானப்படையைச் சேர்ந்த குழுவொன்றுக்குக் கிடைத்த செய்திக்கொத்துப் பிரதி ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகள் வசம் ஐந்து விமானங்கள் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டது. 14 பக்கங்கள் கொண்ட அந்தச் செய்திக்கொத்தின்படி, விடுதலைப் புலிகள் வசம் 600 நோற்றிக்கல் மைல்களுக்கு இடையீடின்றிப் பறப்பை மேற்கொள்ளத்தக்க 200 நொட்ஸ் உயரம் வரை அதிவேகத்தில் பறக்கும் வலுக்கொண்டவையும் 250 கிலோ எடை கொண்ட வெடிபொருள்களைத் தாங்கிச் செல்லத்தக்க ஐந்து இலகுரக விமானங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியத் தரப்பால் இலங்கை விமானப்படைக்கு வான்வெளிப் பாதுகாப்பு 'ராடர்' கருவிகளை அன்பளிப்புச் செய்வது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட இலங்கை விமானப்படையின் உயர்மட்டக்குழு பெங்களூரிலுள்ள இந்திய விமானப்படைத் தளத்துக்கு விஜயம் செய்து 'ராடர்' கருவிகள் தொடர்பான விளக்கங்கள் குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்ட வேளையிலேயே அத்தகைய விளக்கக் குறிப்பைப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது.

சீன அரசிடமிருந்து நான்கு 'ராடர்' கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்னைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுக் கட்டளையை ரத்துச்செய்யுமாறு இந்திய அரசு கேட்டுக்கொண்டது. அதற்குப் பதிலாக இந்தியா முதலில் (05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்புலிகளின் பலம் குறித்து......

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பரிமாண 'ராடர்' கருவிகளை அமைத்துக் கொடுக்குமெனவும் அவை பின்னர் நான்கு பரிமாணம் கொண்டவையாகத் தரமுயர்த்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இரண்டு பரிமாணம் கொண்ட 'ராடர்' கருவிகள் சரியான திசையையும், இலக்கின் தூரத்தையும் தெளிவுபடுத்துமெனவும் நான்கு பரிமாணம் கொண்ட ராடர் கருவி மேற்குறித்த இரண்டு செயற்பாடுகளுக்கு மேலதிகமாக உயரத்தையும் தெளிவுபடுத்துமெனவும் தெரிவிக்கப்பட்டது.

"யுத்த நிறுத்தமொன்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இலங்கை அரசுக்கும் தீவிரவாதக் குழுக்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பு மூன்றாவது பரிமாணமொன்றினைச் செயற்படுத்துவதற்கான கட்டமைப்பொன்றை அபிவிருத்திசெய்வதில் ஈடுபட்டுவருவதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிட்டியுள்ளன. தரையிலான மோதல்கள் சாதகமான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டுவந்துள்ளன.

இரட்டை இருக்கை, நான்கு இருக்கைகள் கொண்ட இலகுரக விமானங்களின் தரையிறக்கத்துக்கான வசதிகொண்ட வகையில் இரணைமடுவில் உருவாக்கப்படும் ஓடுபாதையும், விமானத்தைக் கையாள்வதற்கான பயிற்சிகளை விடுதலைப் புலிகள் வழங்கிவருவதும் மூன்றாவது பரிமாணமாக வான் சண்டைகளை மேற்கொள்ளும் நிலையை உருவாக்கிவைக்கும். இலங்கை அரசு இது குறித்து வெகுவாகக் கவனம் செலுத்திவருகின்றது. பயங்கரவாதத்துக்கு எதிராக தனது வான் எல்லையில் தனது இறைமையை நிலைநாட்டிக்கொள்ளும் தேவைக்கு இந்திய அரசு உதவவேண்டுமென்ற தனது விருப்பத்தை இலங்கை அரசு வெளிப்படுத்தியுள்ளது" மேற்கண்டவாறு அந்த விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் குறித்து அந்த விளக்கக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

* கொழும்பு மற்றும் கொழும்பின் சுற்றுவட்டத்திலுள்ள பொருளாதார மையங்கள்.
* தேசிய தலைமைத்துவம்.
* வான்வழியாக இராணுவத் தளபாடங்களையும் உபகரணங்களையும் எடுத்துச்செல்வதற்கு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளத்தக்க அச்சுறுத்தல்.
* முக்கிய கேந்திர நிலையங்களில் மேற்கொள்ளத்தக்க தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள்.
* சாதாரண பொதுமக்களை உணர்ச்சிவசப்படுத்தும் விதத்தில் முக்கிய மையங்களிலும், முக்கிய இடங்களிலும் சமகாலத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள்.
* வான்வெளி உபகரணங்களைப் பயன்படுத்தி தமது கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும், ஏற்கவைக்கவும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பயமுறுத்தல் விடுப்பதற்குமான வாய்ப்பு.

அரசினால் முன்வைக்கப்பட்ட மேற்குறித்த அக்கறைக்குரிய அம்சங்கள் சிலவற்றை இந்திய விமானப்படைத்தரப்பு மாற்று மதிப்பீடுகளை முன்வைத்திருந்தது. அவற்றில் ஒரு சில வருமாறு:-

* குறிப்பிட்டதொரு விமானம் கடல்வழியான பறப்பின்மூலம் கொழும்பு நிர்வாகம், இலங்கையின் தென்பகுதி மற்றும் கிழக்குப் பகுதிக் கடலோரங்களில் தமது இலக்கைக் குறிபார்ப்பதற்கான போதுமான இடப்பரப்பு வசதியுண்டு. இருந்தபோதிலும் வான்வெளி அவதானிப்பு மையத்தைக் கொழும்பில் நிறுவுவதன்மூலம் கொழும்பையும் கொழும்பின் சுற்றுப்புறத்தின் மீதும் மேற்கொள்ளமுயலும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த இயலும்.
* அமைக்கப்படும் வான்வெளிப் பாதுகாப்பு மையம் கொழும்புப் பிரதேசத்தில் அமைக்கப்படுவதால் கொழும்பில் முக்கிய கேந்திர நிலையங்கள் மீதான தாக்குதலுக்கு கிழக்குக் கடல் பிராந்தியம் மூலம் அச்சுறுத்தல் ஏற்படலாம்.
* சி-130 ரக விமானம் இரணைமடுவின் விமான ஓடுபாதையிலிருந்து தனது பறப்பை மேற்கொள்ள இயலும். இது 10 முதல் 15 வரையான தொன் எடையைச் சுமந்து செல்லத்தக்கது.
* இரணைமடு விமான ஓடுபாதையைச் சூழவுள்ள காடுகள் விடுதலைப் புலிகளது விமான உபகரணங்களுக்குப் பெரும் பாதுகாப்புத் தன்மையை வழங்கவல்லன.

Vacancies

அண்மையில் தென்மராட்சி நகரப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட SCOT கணனி நிறுவனத்திற்கு MS-Office, DTP, AutoCad, CorelDraw கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு T.P:-0776701394

கற்குழி 1ம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.03.2007 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10-09-1937 | 20-03-2007 |

அவர்களின் அந்தியோட்டிக் கிரியைகள் நாளை (09.04.2007) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 10.04.2007 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'ஜெயஸ்தான்'
இல. 06, தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (59346)

குடும்பத்தினர்.

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்



மீசாலை மேற்கைச் சேர்ந்த

சற்குணநாதன் நந்தகோபன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17.09.1969 | 08.04.1987 |

திதி: 08.04.2007

நந்தன் என்ற நாமம் மங்கியதோ
உன் புன் சிரிப்பு முகம் என் கண்முன்
தோன்றிமறையுதடா, ஆண்டுகள்
20 போனாலும் உன் ஆசை முகம்
போனதிசை அறியோம், பெற்றமனம்
துயருற்று வாடுதடா உன் நினைவால்

அன்பு அப்பா, அம்மா, அக்கா றஞ்சி நவம், நந்தினி, தம்பி வேணன், தங்கை சிறிரஞ்சினி மற்றும் மைத்துனர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

பிருந்தாவனம்,
மீசாலை மேற்கு.
தொ.பே. 0602212969,
0776660199. (59349)

தகவல்:
லயன். சி. சற்குணநாதன்
(Retd. T.A.)

A/L 2009

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆங்கிலமும் ஆரம்மாகியுள்ளன.

Econ -Mr.B.கஜீதரன்
Tamil -Mr.S.சிவா
Log. -Miss N.சசிக்கலா
Chris - Mrs.A.மல்லிகா
Drama-Mr.M.மயூரன்
Geo. & Hindu வகுப்புகளும்

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

அமைதியான சூழலில் எமது முன்னணி ஆசிரியர் சேவையில்

O/L Day Class

ஆரம்பம் - 09.04.2007
காலை 8 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மது கல்வி நிறுவனம்,
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்

இறைச்சிக் கோழி

ஐஸ் புரொயிலர் இறைச்சி விற்பனைக்கு உண்டு.

NEW R.S.K. FARM

மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

Vacation @ SCOT

SCOT

விடுமுறை காலங்களில் SCOT கணனி நிறுவனத்துடன் இணைந்து கணனி அறிவை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு 13-04-2007ற்கு முன்னர் அலுவலகத்தை அணுகவும்.

கற்குழி 1ம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P:- 0776701394

மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல நிறுவனமொன்றில் பணிபுரியும் B.Sc. பட்டதாரி, 31 வயது 5'4" உயரமுடைய றோமன் கத்தோலிக்க கௌரவகுடும்ப மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 222 9101

ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி

A/L 2009

பிரிவு II
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் - 08.04.2007
நண்பகல் 12 மணி
வழமையான முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

Group Classes

English Medium Science
(Gr.9,10)
By: Mr.P.Ragumar
Tue, 6.30am Thu. 6.30 a.m
75, Ramalingam Road,
Thirunelvely East.

## கண்ணீர் அஞ்சலி



சிறிநதியா நகைமாளிகை முகாமையாளர் வசீகரன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

ஜெயபூபதி குலசிங்கம்

அவர்கள் காலமாகியதையிட்டு

சிறிநதியா உரிமையாளரும் பணியாளர்களும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்களும்
சிறி நதியா
நகைமாளிகை

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகராசா அன்னபூரணம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராசா அன்னபூரணம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) 03.04.2007 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சுப்பையா சண்முகராசாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் தேவி, காலஞ்சென்ற தங்கவேலு அகியோரின் அன்புச் சகோதரியும் செல்வக்குமரன், செந்தில்க்குமரன், திருக்குமரன் ஆகியோரின் அன்புத் தாயும் யசிந்தா(மீனா), வாசுகி ஆகியோரின் அன்பு மாமியும் சஸ்னன், கோபிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2007)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
02085002192,
07960484959. (59378)

தகவல்:
சு.சண்முகராசா
(கணவர்)

## யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

சிரேஷ்ட கணித ஆசான் திருவாளர் சின்னத்துரை திருச்செல்வன் அவர்களின்

மணி விழா வாழ்த்துக்கள்



எமது பாடசாலையில் ஒரு தசாப்தம் கல்விப்பணி, பொதுப் பணி ஆற்றி இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெறும் ஆசானை பல்லாண்டு காலம் நீடூழி வாழ பாடசாலைச் சமூகம் நெஞ்சார வாழ்த்துகின்றது.

(59350) பாடசாலைச் சமூகம்.

நாடக விழா 2007

சிறுவர்களின் உளமேம்பாடு மற்றும் ஆளுமைத்திறன் விருத்திக்கான செயற்திட்டம்



ஆனந்தத் தாண்டவம்



சிறுவர் மகிழ் அரங்கம்

நேரம்: காலை 9 - 1 மணி
காலம்: 07, 08 ஏப்ரல் 2007
இடம்: யாழ். மத்திய கல்லூரி

(59368)

செயல்திறன் அரங்க இயக்கம்
ATM ACTIVE THEATRE MOVEMENT

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

அமரர் மகானந்தன் அழகேந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும், நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வேலணை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 11 |
| ★ | ★ |
| 05 | 03 |
| ★ | ★ |
| 1942 | 2007 |



### திருமதி சரஸ்வதி கனகரட்ணம்

(இளைப்பாறிய பிரதி அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

கடந்த 11.03.2007 இல் இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு சரஸ்வதி கனகரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றியிலும் 10.04.2007 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சரஸ்வதி வாசம்'
பிராமணரோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (59355)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி இராசலிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசலிங்கம் 06.04.2007 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - ஆச்சிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமியின் அன்பு மருமகனும் சின்னத்தம்பி - துரையம்மாவின் (தங்கக்கட்டி), அன்பு கணவரும் அச்சுதன், மகாலிங்கம், தர்மலிங்கம் (சுவிஸ்), இராசலட்சுமி, காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரராஜ் (ஆசிரியர் யா/ வாத. விக்கினேஸ்வரா) மாலினி, சுதாஜினி (ஆசிரியை - யா/ தோம்பு அருள்நந்தி வித.), வதனி (குடும்பநல உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை), லக்சகா (பிரதேச சபை, புத்தூர்), இளங்கோ (ஆசிரியர் வவுனியா), லக்கி (விவசாயத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதகுலசிங்கம் (ஆசிரியர் அச். மத்திய கல்லூரி), இராசவர உதயம் (உயர் நீதி மன்றம் - யாழ்ப்பாணம்), சுரேஸ்கண்ணா (இ.போ.ச. கோண்டாவில்), லோகநாயகி (குடும்பநல உத்தியோகத்தர் - வேலணை) ஆகியோரின் பாசமிகு மாமனும் மனோஜா, லக்சயன், கோவர்த்தன், கோபிகா, அங்குசன், சோபிகா, கஜானா, தாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசினர் வைத்தியசாலை
அச்சுவேலி முன்பாக,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (39384)

தகவல்:
இ.சந்திரராஜா (மகன்-
யாழ். வாதரவத்தை
விக்கினேஸ்வரா வித்தியாசாலை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான சூழலில்.....

## எடிசன் அக்கடமி யாழ்ப்பாணம்.

### O/L DAY CLASS

ஆரம்பம் 09.04.2007 (காலை 8மணி)

கணிதம் - B.P.பாஸ்கரன்
P. சிவகுமார்
T.ரவீந்திரன்
விஞ்ஞானம் - இரா.செல்வவடிவேல்
சமூகக்கல்வி - R.S.சந்திரன்
தமிழ்/சமயம் - பண்டிதர் வேலாயுதபிள்ளை
ஆங்கிலம் - B.சுபாஷ்
வணிகக்கல்வி - S.சந்துரு

நிர்வாகி:
B.P.பாஸ்கரன்

(59358)

## தேவை

பேக்கரித் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் நாளை நேரில் வரவும். நேரம்: 11 மணி. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

118, றொலெக்ஸ் பேக்மார்ட்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(59387)

யாழ்ப்பாணக் கல்லூரியினரால் நடத்தப்படும்

## கிறிஸ்து உயிர்ப்பு விழா

காலம்: 08.04.2007 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப 3மணி
இடம்: ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி/52202)

## ஐடியல் அக்கடமி A/L 2009

ஆரம்பம் : 09-04-2007 திங்கள் 8.00am

சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் நீராவியடி யாழ்ப்பாணம்

### கலைப்பிரிவ

தமிழ் -V.M லிங்கம, A.K.கீர்த்திகன்
இந்துநாரிகம் : P. சந்திரன்
அளவையியல் : E.S. பவன்
நாட..அரங். : V.S. இலக்கியா
அரசியல் : K.சுகாஸ்
வரலாறு : S.சுஜிகரன்
புவியியல் : S.அனோஜன்

### வர்த்தகப்பிரிவு

வணிகம் : K.முரளி
கணக்கீடு:S.நித்தி,S.சீலன்
பொருளியல்:S ஸ்ரீ.N.சுகந்தா

### கணித விஞ்ஞான பிரிவுகள்

CHE : A.தபேசன், E.றஞ்சன்
PHY : S.கபிலன்,
C.Maths : S.சிவகரன்
Bio :V. S.செல்வன்


## கண்ணீர் அஞ்சலி



வேலணை, காரைநகர் பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

**மகானந்தன் அழகேந்திரன்**

(சமாதான நீதிவான்)

அவர்கள் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள குடும்பம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(59392)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் இ.வசிகரன் அவர்களின் அன்புத் தந்தை

**சிவஞானம் இராஜேஸ்வரன்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள், நிதிக்கிளை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(59395)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அமரர்

**பரந்தாமன் பிருந்தாபன்**

(பதவிநிலை உத்தியோகத்தர் - நிதிப்பிரிவு)
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அன்னை மடியில் 01-08-1950
இறைவன் அடியில் 12-03-2007

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

கடந்த 12.03.2007 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பரந்தாமன் பிருந்தாபன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 09.04.2007 திங்கட்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.04.2007 புதன்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இடம்பெறும். அனைத்து நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்)

இல: 393/47, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


வாசகர்களே!
மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவரின் அந்த நாள் ஞாபகம் இரண்டாவது பகுதி அடுத்த ஞாயிறு இதழில் வெளிவரும்.

## New A.A.C
சுன்னாகம்

A/L 2009 கலை, வர்த்தக பிரிவு
ஆரம்பம்:
08.04.2007 Sun 3 p.m.

O/L Day Class
ஆரம்பம்:
08.04.2007 Sun 8 a.m.

புதிய அனுமதிகள் இன்று முதல்

K.K.S.Road,
Chunnakam.

## BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 2009
* கலை * வர்த்தகம்
* கணித * உயிரியல்

எமது 'SUPER GRADE' ஆசிரியர் குழு
ஆரம்பம்:
இன்று 08.04.2007 ஞாயிறு
பிற்பகல் 1 மணி

O/L Day Class
ஆரம்பம்:
09.04.2007 திங்கள்
காலை 8 மணி

## BARATHY
சித்தன்கேணி

O/L DAY CLASS

நாளை ஆரம்பம்
திங்கள் காலை 8 மணி

எமது வழமையான ஆசிரியர் குழுவினால் சென்ற ஆண்டு போல் இவ் ஆண்டும் 100 மாணவர்களுக்குமட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.


## நீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வாழ்த்துக்கள் அனைவருக்கும் அன்பையும் சமாதானத்தையும் பாது காப்பையும் புதுவாழ்வின் நம்பிக்கையையும்கொண்டு வரும் என்றே நம்புகின்றோம். சகிப்புத் தன்மை - இரக்கம் மன்னிப்பு- விட்டுக் கொடுத்தல்- ஏற்றுக் கொள்ளுதல் போன்றநற் பண்புகளை நமதாக்கி வாழ்கின்ற போதே இந்தசமாதானத்தை அனுபவிக்க முடியும்என்று உள்ளது.

(அ)


நாளை ஆரம்பம்
18 வருட கல்விச் சேவையில்

## O/L DAY CLASS

பிரிவு : 2
ஆரம்பம் : 09.04.07 Mon.8.30

கணிதம் -K.நிரஞ்சன்
-S.பிரதீப்
விஞ்ஞானம் -சங்கர்வாமன்
தமிழ் -S.வைகுந்தநாதன்
சமூ.கல்வி -R.றொபின்சன்
ஆங்கிலம் -Y.ஜெயந்தன்
சமயம் -S.லோகநாதன்
வர்த்தகம் -L.மயூரன்
விவசாயம் -S.ரமேஸ்

அனுமதிகள் ஏப்ரல் 30 வரை

## நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

O/L Day Class
பகல் நேர வகுப்புகள்

எமது 'SUPER GRADE' ஆசிரியர் குழு
ஆரம்பம்:
09.04.2007 திங்கள்
காலை 8 மணி

A/L 2009

கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

## விற்பனைக்கு

1. 5KW டீசல் ஜெனரேட்டர்
2. குளிரூட்டி (A.C)
3. ஒரே தடவையில் 9 CD பதிவுசெய்யக் கூடிய மல்ரி றைற்றர் (Multi Writer)
4. ஒரே தடவையில் 5கசட்பதிவு செய்யக் கூடிய மல்ரி றெக்கோடர் (Multi Recorder)
5. CD Lable பிறிண்டர்
6. VHS டெக்
7. வீடியோக்கடைக்கு உரிய CD சோக்கேஸ் மற்றும் வீடியோ பிரதிகள் (VHS) VCD என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு :- இல.141B, பலாலி வீதி,
தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,
தொ.பே: 021 222 4257, 0773151530.

## கார் விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள புதிய நீல நிற INDIGO-GLX-TATA-KA XXXX தொடர் இலக்கக் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே: 0777 734339

## கோழி இறைச்சி விற்பனைக்கு

Prima Broilers கோழி இறைச்சி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 8119


## அவசர சந்திப்பு

வெளி மாவட்ட மத்திய அரச ஊழியர் 09.04.2007 காலை 8.30 யாழ். மத்திய பஸ் நிலையத்தருகில்.

சக ஊழியர்.

## கண்ணீர் அஞ்சலி



எக்ஸ்போ விமான சேவையின் யாழ்.முகாமையாளர் குலசிங்கம் வசீகரன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

ஜெயபூபதி குலசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ரீல்கோ கொலிடேய்ஸ்
பிறைவேட் லிமிட்டட், யாழ்ப்பாணம்.

## பிறந்தநாள் நினைவலைகள்



அமரர்
அழகர்சாமி சரவணகுமார்

அன்புடன் நாமிருக்க - அந்த
இறைவனுக்கும் பிடிக்கவில்லை
நம் எதிர்காலம் பற்றி எத்தனை
கனவுகள் நாம் கண்டோம்
எங்களையும் உங்களையும் பிரிக்க
எப்படித்தான் கடவுளுக்கு மனம் வந்ததோ!
அநாதையாய் நாங்கள் இங்கே
அவனியில் நீங்கள் எங்கே?
நிஜமாக நீங்கள் இல்லையா!
நினைக்க மனம் மறுக்கிறது
எங்களை மறந்து போனீர்களோ
அப்பா நீங்கள் எங்கே?

37, பிரப்பங்குளம்,
யாழ்ப்பாணம்.

(59504)

உங்கள் நினைவுகளில் வாழும்.
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியதாஸ் புஸ்பராணி (புஸ்பம்)



A.V. றோட், கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி மரியதாஸ் புஸ்பராணி (புஸ்பம்) நேற்று (07.04.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மரியதாஸின் (முத்துராசா) மனைவியும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - சொர்ணம்மா தம்பதியரின் மகளும் யோன் டேவிட், பிரான்ஸிஸ், ரோஸ்மலர், வின்சன், மேரிஸ் ரெலா ஆகியோரின் சகோதரியும் அருளானந்தம், காலஞ் சென்றவர்களான பிலிப்பு ஆசீர்வாதம், அருளப்பு, நல்லம்மா ஆகியோரின் மருமகளும் யோகராணி, நாகரெத்தினம், காலஞ் சென்ற இராசதுரை,அமலதாஸ், டொன்பொஸ்கோ, அமுதா ஆகியோரின் மைத்துனியும் மலரின் சகலியும் ஆவார்.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை (09.04.2007) திங்கட்கிழமை காலை 9மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

23/2, சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை,
A.V.றோட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(59501)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி செல்லம்மா கனகரத்தினம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கையும் லண்டனையும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா கனகரத்தினம் (04.04.2007) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V.K.கனகரத்தினத்தின் (யாழ். குணரத்தினம் ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை, ஸ்ரீ முருகன் மில் பங்காளர்) அன்பு மனைவியும் அமரர்கள் துரையப்பா - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் அமரர்கள் கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் நாகமணி (குப்பிளான்), அமரர் பாக்கியம் ஆகியோரின் தங்கையும், தங்கமலர், அமரர் சின்னத்துரை, V.K.குணரத்தினம், V.K. அன்னலிங்கம் (கனடா), கமலாதேவி (கனடா), அமரர் அம்பாலிகை, பரமேஸ்வரி (U.K) ஆகியோரின் மைத்துனியும் கௌரி (U.K), கௌசலா (U.K), கௌதீஸ்வரன் (கனடா), கௌதீஸ்வரி (கனடா), கௌசினி (சுவிஸ்), கௌசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் மகேந்திரன் (U.K), நவரத்தினம் (U.K), பிரியதர்சினி (கனடா), அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா, ஜெயக்குமார் (சுவிஸ்), சுவேந்தினி (கனடா) ஆகியோரின் மாமியும் நிவேதா, மேதினி, சிநேகா, நிதுர்ஷன், நிந்துஷா, நிலுக்சன், சிம்யா, அக்ஷயா, றேனுசன், ஜஸ்வினி, ஜஸ்மிதா, துாரிசன், அஹிசன், அஸ்வின், ஆதிரா, சஞ்னா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2007) திங்கட்கிழமை LONDON HENTON மயானத்தில் பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் இந்து முறைப்படி இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.K.குணரத்தினம்(மைத்துனர்),
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே:- 021 4590845, 021 2225459.

தகவல்: திருமதி.ம.கௌரி (மகள்),
தொ.பே: 0044 2083457327,
0044 7951277207,
E-mail :- GOWRI 3@YAHOO.COM

(59385)

## இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர், தலைவர்- கொழும்பு தமிழ்ச் சங்கம்)



இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம் 05.04.2007 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை- பத்தினியார் தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற தேவராணியின் அன்புக் கணவரும் வைத்திய கலாநிதி சுதர்சன், சுபாஷினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வவிநாயகன் (கொழும்பு Swiss Viogenies), இரத்தினேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் இராசலிங்கம், பண்டிதர் திருநாவுக்கரசு, திருமதி செல்லம்மா தம்பிஐயா, இராசரத்தினம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மலாயன் பென்சனர்களான தம்பிஐயா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தேவராசா (முன்னாள் அதிபர்-கொக்குவில் இந்துக் கல்லூரி, பகுதிநேர ஆங்கில விரிவுரையாளர்-பலாலி ஆசிரியர் கலாசாலை), காலஞ்சென்ற திருமதி கமலராணி உலகேஸ்வரன் (ஆசிரியை), திருமதி தர்மகுணராணி சண்முகலிங்கம், திருமதி அருந்தவராணி கதிர்காமநாதன், இணுவை சுப்பிரமணியம் (கடவுள், அதிபர்- கட்டுடை சைவ வித்தியாசாலை), செல்வானந்தராஜா (செல்வம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அஜித்தின் (கொழும்பு) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கொழும்பு ஜெயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்வானந்த வாசா,
இணுவில் மேற்கு, இணுவில்.
தொ.பே: 222 7563, 7692

(59360)

தகவல்:
வைத்திய கலாநிதி சு.சுதர்சன் (மகன்),
க.தேவராஜா (மைத்துனர்).

## செல்லப்பா கனகசபாபதி (யோகு)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகசபாபதி நேற்று (07.04.2007) சனிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தாரணி (ஆசிரியை- கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்), வித்ருபினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- யா/ விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

232, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(59396)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## ஞானப்பிரகாசம் நீக்கிலஸ்

யாழ்ப்பாணம், குருசோ வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானப்பிரகாசம் நீக்கிலஸ் நேற்று (07.04.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் எமல்டாவின் அன்புக் கணவரும் யூட் சதீஸ்குமார் (முகாமைத்துவ உதவியாளர்-யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), அன்ரனிற்றா (ஆசிரியை-யா/தென்னிந்தியத் திருச்சபை, நகர்பணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்வின், திரேசம்மா, நீற்ரா, வில்பிரட், தாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி யூ.லிண்டாலக்சுமியின் (ஆசிரியர்-யா/மத்திய கல்லூரி) மாமனும் யூடிற் ஏஞ்சலின், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் யா/புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இன்று (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணம்.

(59391)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org